**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்** - 613 010
**தொலைநிலைக் கல்வித் தேர்வுகள்**

தொலைபேசி : 04362-227845
கைபேசி : 7598312106

**முனைவர் சி. சுந்தரேசன்**
கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ)

நாள்:31.03.2017

## சுற்றறிக்கை

பொருள்: தொலைநிலைக் கல்வி - இளங்கல்வியியல் - மே 2017 தேர்வுகள் - தொடர்பாக.

2016 - 2017 கல்வியாண்டு ஆண்டிற்கான தொலைநிலைக்கல்வித் தேர்வுகள் மற்றும் துணைத் தேர்வுகள் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்கம் வழியாக இளங்கல்வியியல் பயிலும் மாணவர்களுக்கு 02.05.2017 முதல் 05.05.2017 வரை தேர்வுகள் நடைபெறவுள்ளன. தேர்வு எழுதும் மாணவர்கள் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| தேர்வுக் கட்டண விவரம் | முதலாமாண்டு ரூ. | இரண்டாமாண்டு ரூ |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | 100 | 100 |
| ஒரு தாளுக்கு கட்டணம் ரூ.225/- வீதம் (4 தாள்களுக்கு ) | 900 | 900 |
| மதிப்பெண் பட்டியல் கட்டணம் | 100 | 100 |
| தற்காலிகச் சான்றிதழ் கட்டணம் | -- | 300 |
| செய்முறைத் தேர்வுக் கட்டணம் | -- | 1000 |
| அஞ்சற் செலவினம் | 100 | 100 |
| மையக் கட்டணம் | 100 | 100 |
| கூடுதல் | 1300 | 2600 |

பிற கட்டணங்கள்(மாணவர்கள் தேவைப்படும் போது விண்ணப்பிக்கவும்)

| | |
|---|---|
| உண்மைத்தன்மைச் சான்றிதழ், கடைசித் தேர்வு சான்றிதழ், பதிலிச்சான்றிதழ், சான்றிதழில் பெயர் திருத்தம்(ஒவ்வொன்றிற்கும்) | ரூ. 1000 |
| மறுமதிப்பீட்டு கட்டணம் | ரூ. 500 |
| தொகுப்பு மதிப்பெண் பட்டியல் கட்டணம் | ரூ. 200 |

தேர்வுக் கட்டணத்தை பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளையில் (A/C No. 814510110001726) என்ற எண்ணில் செலுத்தலாம். தேர்வுக் கட்டணம் செலுத்தியதற்கான இரசீதினை விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்கவேண்டும். வங்கியில் தேர்வுக்கட்டணம் செலுத்த இயலாதவர்கள் "பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்".(THE REGISTRAR, TAMIL UNIVERSITY, THANJAVUR-10) என்ற முகவரிக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வங்கி வரைவோலையாகவும் செலுத்தலாம். வரைவோலையின் பின்புறம் பெயர், பதிவுஎண், பாடம் ஆகியவற்றைக் கண்டிப்பாக குறிப்பிடவேண்டும்.

**தேர்வு கட்டணம் செலுத்த இறுதிநாள் 17.04.2017 . ரூ.100/-தாமதக் கட்டணத் தொகையுடன் செலுத்த இறுதிநாள் 21.04.2017.**
**ரூ 500/- தண்டக்கட்டணத்துடன் செலுத்த இறுதிநாள் 28.04.2017**
**நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் 28.04.2017.**

விருப்பப் பாடங்களை மாணவர்கள் தேர்வு செய்யும்போது அதற்கான குறியீட்டு எண்ணை தவறாது குறிப்பிடவேண்டும் தேர்வுக் கட்டணமின்றிப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா. ஒரு முறை செலுத்திய தேர்வுக் கட்டணம் எந்தவொரு நிலையிலும் மீள வழங்கவோ அடுத்து வரும் தேர்வுக்கு ஈடு செய்யவோ இயலாது. தேர்விற்கு முதன்முதலில் விண்ணப்பிக்கும்பொழுது, அவ்வாண்டின் அனைத்து பாடங்களுக்கும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மாணவர்கள் கல்விக்கட்டணத்தை முழுமையாக செலுத்திய பின்னரே தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். மாணவர்கள் எவருக்கேனும் தேர்வு எழுதுவதற்கு தனியாள்(Scriber) தேவைப்படின் முன்கூட்டியே தனியாளின்(Scriber) தன்விவரக்குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இவர்களின் கல்வித்தகுதி +2 படிப்பிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை மறு மதிப்பீடு செய்ய தேர்வு முடிவுகள் வெளியான 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்கலாம். காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டா. தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டபின் தேர்வு முடிவுகளை மாணவர்கள் www.tamiluniversity .ac.in என்ற இணையதளத்தின் மூலமாக உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்கள் தேவைப்படின் கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவரைக் கடிதம் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் 04362 227845 / 7598312106

| எண் | மையம் | தேர்வு மையத்தின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| 01 | தஞ்சாவூர் | கரிகாற் சோழன் கலையரங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010 தொ.பே.எண் 04362-227782/7598312106 |
| 02 | மயிலாடுதுறை | பெஸ்ட் கல்வியியல் கல்லூரி, 26/54 மயூர நாதர், மெயின் ரோடு, மல்லியம், வடக்குத் தெரு, மயிலாடுதுறை - 609 001 நாகப்பட்டினம் மாவட்டம் தொ.பே.எண் 9944432652 |
| 03 | சென்னை | லேடி வில்லிங்டன் கல்வியியல் உயராய்வு நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 தொ.பே.எண் 044-28445531 |
| 04 | தருமபுரி | பச்சமுத்து கல்வியியல் கல்லூரி, சேலம் மெயின் ரோடு, தருமபுரி, தொ.பே. எண் 0432-230604,288882 |
| 05 | சிவகாசி(விருதுநகர்) | அரசன் கணேசன் கல்வியியல் கல்லூரி, எண் 18 சேர்மன் ஏ.சண்முகம் ரோடு, சிவகாசி, விருதுநகர் - 626 123 தொ.பே.எண் 04562-220117 |
| 06 | அரக்கோணம் | விவேகானந்தா வித்யாலயா கல்வியியல் கல்லூரி,காவனூர் கிராமம்,அரக்கோணம்(தா), வேலூர் - 631 004 தொ.பே எண் 04177 293840, 9443134883 |

**முதலாமாண்டு தேர்வுக் கால அட்டவணை (நேரம் : முற்பகல் 10.00-1.00 )**

| நாள் | தாள் குறியீடு | தாளின் தலைப்பு |
|---|---|---|
| 02.05.2017 | இகமு 001 | வளரும் இந்திய சமுதாயத்தில் கல்வி |
| 03.05.2017 | இகமு 002 | கற்றல் மற்றும் மனித வளர்ச்சி உளவியல் |
| 04.05.2017 | விருப்பப் பாடம் 1<br>இகமு 003 - 007 | இகமு 003 தமிழ் கற்பித்தல்<br>இகமு 004 ஆங்கிலம் கற்பித்தல்<br>இகமு 005 கணிதம் கற்பித்தல்<br>இகமு 006 அறிவியல் கற்பித்தல்<br>இகமு 007 சமூக அறிவியல் கற்பித்தல் |
| 05.05.2017 | விருப்பப் பாடம் 2<br>இகமு 003 - 007 | இகமு 003 தமிழ் கற்பித்தல்<br>இகமு 004 ஆங்கிலம் கற்பித்தல்<br>இகமு 005 கணிதம் கற்பித்தல்<br>இகமு 006 அறிவியல் கற்பித்தல்<br>இகமு 007 சமூக அறிவியல் கற்பித்தல் |

**இரண்டாமாண்டு தேர்வுக் கால அட்டவணை (நேரம் : பிற்பகல் 2.00-5.00 )**

| நாள் | தாள் குறியீடு | தாளின் தலைப்பு |
|---|---|---|
| 02.05.2017 | இகஇ 001 | கல்வியியல் புதுமைகள் மற்றும் மேலாண்மை |
| 03.05.2017 | இகஇ 002 | ஆசிரியரும் பள்ளியும் |
| 04.05.2017 | இகஇ 003 | கலைத் திட்டமும் கற்பித்தலும் |
| 05.05.2017 | விருப்பப் பாடம் 2<br>இகஇ 004 - 007 | இகஇ 004 சுற்றுச்சூழல் கல்வி<br>இகஇ 005 வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்<br>இகஇ 006 உடற்கல்வி மற்றும் உடல்நலக் கல்வி<br>இகஇ 007 மனித உரிமைக் கல்வி |

கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ)

இணைப்பு : தேர்வு விண்ணப்பப் படிவம், நுழைவுச்சீட்டு

பெறுநர் : தொடர்புடைய மாணவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய மையங்கள்

நகல் : 1. துணைவேந்தரவர்கள் செயலகம் 2. பதிவாளரவர்கள் செயலகம் 3. நிதிப் பிரிவு
4. இயக்குநர், தொலைநிலைக் கல்வி இயக்ககம்
5. முதல்வர், கல்வியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்